World Tamil Christian Fellowship
60, High Worple, Rayners Lane, Harrow
Middlesex, HA2 9SZ, United Kingdom
www.wcflondon.com
wcflondon@gmail.com

# இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை – பாடம் 23

## அர்மகெதோன் (Armageddon)

நாம் வாழும் காலத்தை சபைக்கான காலம் என்று அழைப்பார்கள். சபைக்கான காலம் இரகசிய வருகையின்போது முடிவுபெரும். நாமும் புதிய ஏற்பாட்டுக்கால பரிசுத்தவான்கள் அனைவரும் இந்த உலகத்தை விட்டு பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுவோம்.

உடனே உபத்திரவக்காலம் துவங்கிவிடும். அதன் கடைசி மூன்றரை ஆண்டுகளை மகா உபத்திரவ காலம் என்று அழைக்கப்படும்.

அர்மகெதோன் என்று அழைக்கப்படும் இறுதியான மகா யுத்தத்தின் போது மகா உபத்திரவ காலம் முடிவுபெறும். அர்மகெதோனின் இறுதியில் கிறிஸ்து தாமே இரகசிய வருகையின் போது அவரோடு சென்றவர்களுடன் திரும்பி வருவார். நாமும் அவருடன் திரும்பி வருவோம் மேலும் அவர் தன்னுடைய 1,000 ஆண்டுகால ராஜ்யத்தை நிறுவுவார். இந்த 1,000 ஆண்டுகள் பூலோக ராஜ்யத்தையே மிலேனியம் (millennium) என்று அழைக்கப்படும்.

பூமியில் மீதமுள்ளவர்களிலுள்ள யூதர்கள் மற்றும் புறஜாதியார் என்ற இரண்டு பிரிவுகளை சார்ந்தவர் மீது தேவன் நியாயம்

தீர்க்க ஆரம்பிப்பார். தண்டனை மற்றும் இரட்சிப்பு என்ற இரண்டு காரியங்களை உள்ளடக்கியதே உபத்திரவ காலம். தேவன் பாவத்திலிருந்து அவர்களை திருத்துவதற்காகத் தண்டித்தார் மேலும் யூதர்களை ஒரு தேசமாக மீட்டார்.

அர்மகெதோன், என்பதற்கான அர்த்தம் இஸ்ரவேலிலுள்ள மெகிதோ (*Megiddo*) என்ற மலை மற்றும் பள்ளத்தாக்கை குறிக்கிறது.

இந்த நாளை 'தேவனின் நாள்' என்றும் இரகசிய வருகையை 'கிறிஸ்துவின் நாள்' என்றும் அழைக்கப்படும். தயவு செய்து இந்த இரண்டையும் குழப்பிக்கொள்ளக்கூடாது.

## 1. இடம்

**வெளி** 16:16, அப்பொழுது எபிரெய பாஷையிலே அர்மகெதோன் என்னப்பட்ட இடத்திலே அவர்களைக் கூட்டிச் சேர்த்தான்.

## 2. யுத்தம்

**வெளி** 16:14, அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள்; அவைகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களைச் சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்குக் கூட்டிச்சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப் போகிறது.

## 3. மகா நாள்

**வெளி** 16:14C, சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும்

*அந்திகிறிஸ்து என்ற நம் முந்தைய பாடத்தில் இரண்டு விஷயங்கள் தனியே நிற்பதைப் பார்த்தோம்.*

1. *சாத்தான் அந்த விதையின் பின்னே இருந்தான்.*
2. *யூத தேசத்தை ஒன்றுமில்லாமல் அழிப்பதே சாத்தானின் விருப்பம்.*

*இரகசிய வருகைக்கு பிறகு அந்திகிறிஸ்து இஸ்ரவேலுடன் 7 ஆண்டுகளுக்கான உடன்படிக்கையை கையெழுத்திடுவான். முதல் மூன்றரை ஆண்டுகளுக்கு சமாதானம் நிலவும். இதுவே அர்மகெதோனுக்கான துவக்கம்.*

*அந்திகிறிஸ்து என்பவன் புதுபிக்கப்பட்ட ரோம சாம்ராஜ்யமாகவோ அல்லது ஐ.நாவாகவோ (UN) இருக்கலாம். அவர்கள் உலகத்தின் மீது ஆதிக்கம் செலுத்தத் தொடங்குவார்கள். வேதத்தில் இல்லாத எந்த கோட்பாட்டையும் ஊகிக்க நான் தனிப்பட்ட முறையில் விரும்பவில்லை.*

*அந்திகிறிஸ்து கட்டுப்பாட்டோடு இருந்து எருசலேமை ஆட்சி செய்வான். மேலும் அந்த மிருகம் உயர சவாரி செய்தான். தானியேல் வரும் என்று முன்னறிவித்த சாம்ராஜ்யம் இதுதான்.*

*வடக்கிலிருந்து ஒரு பெரிய இராணுவம் வந்து இந்த அந்திகிறிஸ்துவின் சக்திக்கு சவால் விடப்போகிறது. இது ரஷியாவாக இருக்கலாம். 1970 இலிருந்து அவர்கள் மிக வல்லமையான சக்த்திவாய்ந்த நாடக வளர்ந்து வருகின்றனர்.*

*இரண்டாம் உலகப்போருக்கு பின்னர் ரஷ்ய முழுவதுமாக நொறுக்கப்பட்டனர். அதன் இராணுவம் அடித்து நொறுக்கப்பட்டது மேலும் அவர்களின் நகரங்கள் முற்றிலும்*

*அழிக்கப்பட்டன. இந்த 25 ஆண்டுகளில், ரஷ்யா ஒரு முக்கிய நாடாகவும் ஒரு உலக சக்தியாகவும் மாறிவிட்டது.*

*நான் ரஷ்யாவில் உள்ள ஒரளவு எல்லா நகரத்திற்கும் பயணித்திருக்கிறேன். இது ஒரு பக்தியற்ற மற்றும் தூஷணமான தேசம் அந்த தேசத்தின் குறிப்பிடத்தக்க அற்புதமான எழுச்சி எல்லோரையும் ஆச்சரியப்படுத்தும். இஸ்ரவேலுக்கு வடக்கில் ரஷ்யா உள்ளது.*

*சமாதானத்தோடும் எந்தவொரு சண்டையும் இல்லாமல் வரும் அந்திகிறிஸ்துவே பின்னர் உலக தலைவனாக மாறிவிடுவான். எந்தவொரு சண்டையும் இல்லாமல் அவன் ஆட்சியைப்பிடிப்பான். ஆனால் இந்த அந்திகிறிஸ்துவை எதிர்க்க வடக்கில் ஒரு தேசம் உள்ளது.*

***எசேக்கியேல்** 38:14, "ஆகையால் மனுபுத்திரனே, நீ தீர்க்கதரிசனம் உரைத்து, கோகை நோக்கிச் சொல்லவேண்டியது என்னவென்றால்: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்; என் ஜனமாகிய இஸ்ரவேல் சுகமாய்க் குடியிருக்கிற அக்காலத்திலே நீ அதை அறிவாய் அல்லவோ?*

*எப்போதுதான் இஸ்ரவேல் அவர்களுடைய நிலத்தில் பாதுகாப்புடன் வசிப்பார்கள்?*

*தானியேல் தீர்க்கதரிசன காலவரிசையின்படி 70 ஆவது வாரம் அந்திகிறிஸ்து இஸ்ரேலுடன் சமாதான உடன்படிக்கையை செய்வார்கள். அவர்கள் பாதுகாப்புடன் வசிக்க வேண்டும் என்ற இந்த காரணத்திற்காக தான் இஸ்ரவேல் அந்திகிறிஸ்துவுடன் உடன்படிக்கை செய்துகொள்ளும்.*

*ஏனென்றால் 2600 ஆண்டுகளுக்கும் மேலாக அவர்கள் ஒரு தேசம் இல்லாமல் உள்ளனர்.*

**எசேக்கியேல்** *38:15, அப்பொழுது நீயும் உன்னுடனேகூடத் திரளான ஜனங்களும் வடதிசையிலுள்ள உன் ஸ்தானத்திலிருந்து வருவீர்கள்; அவர்கள் பெரிய கூட்டமும் திரளான சேனையுமாயிருந்து, எல்லாரும் குதிரைகளின்மேல் ஏறுகிறவர்களாயிருப்பார்கள்.*

*அது வடக்கே மிகுந்த தூரத்திலுள்ளது, அது துருக்கியாக (Turkey) இருக்க முடியாது!*

**எசேக்கியேல்** *38:6, "கோமேரும் அவனுடைய எல்லா இராணுவங்களும் வடதிசையிலுள்ள தோகர்மா வம்சத்தாரும் அவர்களுடைய எல்லா இராணுவங்களுமாகிய திரளான ஜனங்கள் உன்னுடனேகூட இருப்பார்கள்.*

*Gomer and all its troops; the house of Togarmah from the far north and all its troops—many people are with you.*

**எசேக்கியேல்** *38:2, மனுபுத்திரனே, மேசேக் தூபால் ஜாதிகளின் தலைமையான அதிபதியாகிய மாகோகு தேசத்தானான கோகுக்கு எதிராக நீ உன் முகத்தைத் திருப்பி, அவனுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரைத்து,*

*"Son of man, set your face against Gog, of the land of Magog, the prince of Rosh, Meshech, and Tubal, and prophesy against him,*

*அவர்கள் வடக்கே மிகுந்த தூரத்தில் உள்ளவர்கள் அதனால் அவர்கள் ரஷ்யாவைச் சேர்ந்தவர்கள் என்பது தெளிவாகிறது.*

*இஸ்ரவேலர்கள் சுவரில்லா கிராமங்களில் வாழும் ஒரு காலத்தில் உள்ளனர் என்று வ11கூறுகிறது.*

*உங்கள் தகவலுக்காக, ரஷ்யா இஸ்ரவேலுக்கு சுமார் 6,000 மைல்கள் வடக்கே உள்ளது.*

***ஆதியாகமம் 10:2****இல் இருந்து: மாகோகு (Magog) என்பவன் நோவாவின் (Noah) குமாரனாகிய யாப்பேத்தின் (Japheth) இரண்டாம் குமாரன். வரலாற்றாசிரியர்கள் அதை சைதியர்கள் (Scythians) என கண்டுபிடித்துள்ளனர். சைதியர்கள் (Scythians) நேரடியாக இஸ்ரேலின் வடக்கே உள்ள நிலப்பகுதியில் வசித்து வந்தனர் மேலும் அவர்களில் சிலர் ஆர்க்டிக் வட்டத்தின் விளிம்பிற்குள் குடியேறினர் என்று ஜோசஃபஸ் (Josephus) கூறுகிறார். இது ரஷ்யாவைத் தவிர வேறுயாருமில்லை?*

*மேசேக் (Meshech) மற்றும் தூபாலின் (Tubal) ராஜகுமாரன் மொஸ்கோ (Moscow) மற்றும் தூபாலின் (Tubal) பழைய மேற்கோளாக இருக்கலாம். இது தூபாலிஸ்கினால் (Tubalisk) சுவாரஸ்யமாக உள்ளது.*

*வ 5, பெர்சியா (Persia) என்பது தற்போதைய ஈரானை (Iran) குறிக்கிறது.*

*குஷ் (Cush) என்பது எத்தியோபியாவின் (Ethiopia) பண்டைய பெயர்.*

*தொகார்மாஹ் (Togarmah) என்பது கிழக்கு துருக்கியாகும் (Turkey).*

*கோமர் (Gomer) என்பது ஜெர்மனியின் (Germany) பழைய பெயர்.*

*கொகுவை (Gog) ரோஷின் (Rosh) ராஜகுமாரன் என்றும் அழைக்கப்படும். ஒருவேளை ரோஷ் (Rosh) பண்டைய ரஷ்யாவிற்கு சமமானவொன்றாக இருக்கலாம்.*

*ரஷ்யாவிற்கு மத்தியக்கிழக்கு நாடுகள் (Mideast) மற்றும் ஆப்ரிகாவுடனும் (Africa) கூட்டுள்ளது என்பதை நாம் அறிந்திருப்போம்.*

*பின்வரும் உடனடி அண்டை நாடுகள் தங்கள் இந்த குறிப்பிட்ட போரில் இருந்து விடுபட்டிருப்பதை நீங்கள் கவனித்தீர்களா?*

*லெபனான் (Lebanon),*

*சிரியா (Syria),*

*ஈராக் (Iraq),*

*ஈரான் (Iran),*

*எகிப்து (Egypt),*

*சவுதி அரேபியா (Saudi Arabia) மற்றும்*

*பாலஸ்தீனம் (Palestine).*




## *அவர்களுக்கு என்ன நேரிடும்?*

## *சங்கீதம் 83 (தயவு செய்து இந்த முழு அதிகாரத்தையும் படிக்க சிறிது நேரம் எடுத்துக்கொள்ளுங்கள்)*

***சங்கீதம் 83:5-8,*** *5 இப்படி, ஏதோமின் கூடாரத்தாரும்,*
*இஸ்மவேலரும், மோவாபியரும், ஆகாரியரும், 6 கேபாலரும்,*
*அம்மோனியரும், அமலேக்கியரும், தீருவின்*
*குடிகளோடுகூடிய பெலிஸ்தரும், 7 ஏகமனநிர்ணயமாய்*
*ஆலோசனைசெய்து, உமக்கு விரோதமாய்*
*ஒப்பந்தம்பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். 8 அசீரியரும்*

அவர்களோடேகூடக் கலந்து, லோத்தின் புத்திரருக்குப் புயபலமானார்கள். (சேலா.)

| **பழைய பெயர்கள்** | **புதிய பெயர்கள்** |
|---|---|
| ஏதோமின் கூடாரத்தார் *(Tents of Edom)* | பாலஸ்தீனம் *(Palestine)* & தெற்கு யோர்தான் *(South Jordan)* |
| இஸ்மவேலர் *(Ishmaelites)* | சவூதி அரேபியா *(Saudi Arabia)* |
| மோவாபியர் *(Moab)* | பாலஸ்தீனம் *(Palestine)* & மத்திய யோர்தான் *(Central Jordan)* |
| ஆகாரியர் *(Hagrites)* | எகிப்து *(Egypt)* |
| கேபாலர் *(Gebal)* | லெபனான் *(Lebanon)* |
| அம்மோனியர் *(Ammon)* | மேற்கு யோர்தான் *(North Jordan)* |
| அமலேக்கியரும் *(Amalek)* | சினாய் பகுதி அரேபியர்கள் *(Arabs of Sinai Area)* |
| பெலிஸ்தரும் *(Philistia)* | பாலஸ்தீனம் *(Palestine)* |
| தீரு *(Tyre)* | லெபனான் *(Lebanon)* |
| அசீரியா *(Assriya)* | சிரியா *(Syria)* |

*இந்த எல்லா தேசங்களும் தேவனால் அழித்துப் போடப்படும். நமக்கு அது எப்படி தெரியும்?*

*எசேக்கியேல் புத்தகத்தில் தேவன் உச்சரித்த நியாயத்தீர்ப்பை பற்றி நாம் பார்க்கலாம்.*

*தேவன் புறஜாதியாரின் மீது அறிவித்த நியாயத்தீர்ப்பை* ***எசேக்கியேல் 25-32*** *இல் காணலாம்.*

*வரவிருக்கும் நியாயத்தீர்ப்பை பற்றி ஏழு நாடுகளுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டன. இதில் தீரு (Tyre) மற்றும் எகிப்திற்கு (Egypt) அதிகமான இடத்தை வழங்கினர். இந்த விளக்கங்கள் இரண்டு முறை குறிப்பிடப்பட்டுள்ளது.*

*முதலாவதாக, இஸ்ரவேலர்கள் தங்களுடைய நிலத்திற்கு திரும்பி ஒன்றுசேரும் தீர்க்கதரிசனத்தின் போது, [28:25-26]*

*மேலும் இரண்டாவதாக, எகிப்து மீதான பாபிலோனின் வெற்றியை அறிவித்தபோது [29:20-26] இந்த தீர்க்கதரிசனம் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*புறஜாதியார் மீது தேவனின் நியாயத்தீர்ப்பு பரிபூரணமாவதே இந்த அதிகாரங்களின் முழுமையான செய்தியாகும். தன்னுடைய ஜனங்களாகிய இஸ்ரவேலரின் மறுசீரமைப்பை குறித்த தேவனின் வாக்குறுதியின் பரிபூரணத்தையும் அந்த செய்தி கொண்டிருக்கிறது. ஒவ்வொரு தேசத்தாரும் இஸ்ரவேல் மீது தாங்கள் செய்த பாவங்களுக்காக நியாயந்தீர்க்கப்படுவதை நீங்கள் கவனியுங்கள்.*

1. *அம்மோன் (Ammon), மோவாப் (Moab), ஏதோம் (Edom) மற்றும் பெலிஸ்தியர் (Philistia) மீதான தேவனுடைய நியாயத்தீர்ப்பு.* ***எசேக்கியேல் 25:1-17***

   *அம்மோன் (Ammon) மீதான நியாயத்தீர்ப்பு, 25:1-7*

   *மோவாப் (Moab) மீதான நியாயத்தீர்ப்பு, 25: 8-11*

   *ஏதோம் (Edom) மீதான நியாயத்தீர்ப்பு, 25: 12-14*

   *பெலிஸ்தியர் (Philistia) மீதான நியாயத்தீர்ப்பு, 25:15-17*

2. *தீரு (Tyre) மற்றும் சீதோன் (Sidon) தேசங்களின் மீதான தேவனின் நியாயத்தீர்ப்பு. எசேக்கியேல் 26:1-28:26*

3. *எகிப்து (Egypt) மீதான தேவனின் நியாயத்தீர்ப்பு, எசேக்கியேல் 29:1-32:32.*

*எந்தவொரு அந்நிய தேசத்தைக் காட்டிலும் ஏதோம் மீதான நியாயத்தீர்ப்பு பழைய ஏற்பாட்டு புத்தகங்கள் பலவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஏசாயா 11:14; 34:5-17; 63:1-6; எரேமியா 9:25-26; 25:17-26; 49:7-22; புலம்பல் 4:21-22; எசேக்கியேல் 25:12-14; 35; யோவேல் 3:19; ஆமோஸ் 1:11-12; 9:11-12; ஒபதியா; மல்கியா 1:4.)*

*அதனால், கோகும் (Gog) மாகோகும் (Magog) இஸ்ரவேல் தேசத்தை எதிர்த்து வரும்போது இந்த அருகாமையில் இருக்கும் தேசங்கள் யாவும் தேவனால் அழித்துப் போடப்படும்.*

*ஏன்?*

***சங்கீதம் 83:18,*** *யேகோவா என்னும் நாமத்தையுடைய தேவரீர் ஒருவரே பூமியனைத்தின்மேலும் உன்னதமானவர் என்று மனுஷர் உணரும்படி,*

*அவரே இந்த பூமியனைத்தின் மீதான தேவன் என்பதை எல்லோரும் அறிந்துகொள்வதற்காக அப்படி செய்தார்.*

## ***இந்த தேசங்களுக்கான தீர்மானம்:***

1. *அந்திகிறிஸ்து ஆட்சியின்போது இஸ்ரேலுக்கு எதிராக வடக்கிலிருந்து ரஷ்யா முதன் முறை வரும்போது இந்த தேசங்கள் சேராது என்ற பார்வையை நீங்கள் கொண்டிருக்கலாம்.*
2. *மாற்றாக, இந்த நாடுகள் முதல் போரின்போது விலகி இருப்பார்கள், ஆனால் கிழக்கிலிருந்து 200 மில்லியன் மக்கள் இறுதிப் போரில் வரும்போது அவர்கள் இராணுவத்துடன் இணைந்துகொள்வார்கள்.*

*இப்போது அர்மகெதோன் பற்றி நாம் தொடரலாம்.*

*அப்படியாக, அந்த 7 வருடங்கள் நடுவில் அந்திகிறிஸ்துவையும் இஸ்ரவேலரையும் எதிர்த்து வடக்கிலிருந்து ஒரு படை வரும்.*

***எசேக்கியேல் 38:8-12,*** *[8]அநேக நாட்களுக்குப் பிற்பாடு நீ விசாரிக்கப்படுவாய்; பட்டயத்துக்கு நீங்கலாகி, பற்பல ஜனங்கலிருந்து சேர்த்துக்கொள்ளப்பட்டு வந்தவர்களின் தேசத்தில் கடைசி வருஷங்களிலே வருவாய்; நெடுநாள் பாழாய்க்கிடந்து, பிற்பாடு ஜாதிகளிலிருந்து கொண்டுவரப்பட்டவர்கள் எல்லாரும் சுகத்தோடே குடியிருக்கும் இஸ்ரவேலின் மலைகளுக்கு விரோதமாய்*

வருவாய்; அவர்கள் எல்லாரும் அஞ்சாமல் குடியிருக்கும்போது, [9]பெருங்காற்றைப்போல் எழும்பி வருவாய்; நீயும் உன்னுடைய எல்லா இராணுவங்களும் உன்னோடேகூட இருக்கும் திரளான ஜனங்களும் கார்மேகம்போல் தேசத்தை மூடுவீர்கள். [10]கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால் அந்நாளிலே பாழாய்க்கிடந்து திரும்பக் குடியேற்றப்பட்ட ஸ்தலங்களுக்கு விரோதமாகவும், ஜாதிகளிடத்திலிருந்து சேர்க்கப்பட்டதும், ஆடுகளையும் மாடுகளையும் ஆஸ்திகளையும் சம்பாதித்து, தேசத்தின் நடுவில் குடியிருக்கிறதுமான ஜனத்துக்கு விரோதமாகவும், நீ உன் கையைத் திருப்பும்படிக்கு, [11]உன் இருதயத்தில் யோசனைகள் எழும்ப, நீ பொல்லாத நினைவை நினைத்து, [12]நான் கொள்ளையிடவும் சூறையாடவும் மதில்களில்லாமல் கிடக்கிற கிராமங்களுள்ள தேசத்துக்கு விரோதமாய்ப் போவேன்; நிர்விசாரமாய் சுகத்தோடே குடியிருக்கிறவர்களின்மேல் வருவேன்; அவர்கள் எல்லாரும் மதில்களில்லாமல் குடியிருக்கிறார்கள்; அவர்களுக்குத் தாழ்ப்பாளும் இல்லை, கதவுகளும் இல்லை என்பாய்.

இஸ்ரவலர்களுக்கு இந்த நான்கு பண்புகள் இருக்க வேண்டும்.

1. சிதறுதல்
2. ஒன்றாக இணைதல்
3. பாதுகாப்பாக வாழ்தல்
4. படையாக மாறுதல்

இஸ்ரவேலர்கள் பாதுகாப்புடன் சுவரில்லாமல் வசிக்கிறார்கள் என்று வடக்கிலிருந்து வரும் எதிரிகள் நினைப்பார்கள்.

அதனால், நாம் சென்று அவர்களுடைய உடைமையை எடுப்போம் என்று முடிவு செய்து அவர்கள் வருவார்கள். அதுவே அவர்களுடைய முட்டாள்தனமான காரியம்.

அப்படியாக இறுதி நாட்களில் அவர்கள் மேகத்தைப்போல வருவார்கள்.

வ14, ஒரு பெரிய படை

வ15, அவர்கள் மேகத்தைப்போல வருவார்கள்

வ16, நானே கர்த்தராகிய தேவன் என்பதை தேசங்கள் அறிவார்கள்.

தேவன் அவர்களை கீழே கொண்டுவருவார். தேவனே வடக்கிலிருந்து வரும் இந்த படையெடுப்புக்குப் பின் உள்ளார்.

ஏன்?

அவருடைய மகிமையை காட்ட தேவன் விரும்புகிறார்!

இந்த காரியம் நடைபெறுவதற்கு முன்னர் பின்வரும் காரியங்கள் நடைபெறுவது அவசியம்.

1. இஸ்ரவேலர்கள் அவர்களுடைய இடத்தில் இருக்க வேண்டும். அவர்கள் அவர்களுடைய இடத்தில் இல்லாதபோது அவர்களின் மீது படையெடுப்பு நடத்த முடியாது.
   அவர்கள் தங்களுடைய இடத்தில் உள்ளனரா?

2. அவர்கள் அவர்களுடைய இடத்தில் பாதுகாப்புடன் வசிக்க வேண்டும். அது ஒரு சுவரில்லா இடமாக

*இருக்க வேண்டும். இது இந்த நவீன காலத்தின் உண்மை. எருசலேம் திரும்ப கட்டப்படுகிறது, ஆனால் அதை சுற்றி எந்த ஒரு சுவரும் எழுப்பப்படவில்லை.*

*அந்த நேரத்தில் இஸ்ரவேல் தேசம் மிகப்பெரிய செழிப்புடன் இருக்கப்போகிறது என்பதை 12 & 13 வசனங்கள் காண்பிக்கிறது. அதனால் தான் அவர்கள் அவர்களுடைய வெள்ளி, தங்கம், மாடு, பொருட்கள் போன்றவற்றை எடுக்க வருகிறார்கள்.*

*1948 வரைக்கும் மேலும் ஒரு சில வருடங்களுக்குப் பிறகு இஸ்ரவேல் தனித்துவிடப்பட்டது என்பது நமக்குத் தெரியும். இப்போது அவர்களுடைய நிலம் விலைமதிப்பற்றது. இப்போது இஸ்ரவேலர்கள் அவர்களுடைய இடத்தில் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய பாதுகாப்பை பற்றி நமக்கு தெரியும். இந்த கணத்தில் எப்படிப்பட்ட ஆபத்தான சூழ்நிலைகளில் அவர்கள் வாழ்கிறார்கள் என்பது நமக்கு தெரிந்தவொன்று.*

*அந்திகிறிஸ்து உலகத்தின் வல்லரசாக மாறிய பிறகு அவர்களுக்கு முதல் மூன்றரை ஆண்டுகளுக்கு சரியான அமைதி நிலவும்.*

***எசேக்கியேல் 38:18-19**, [18] "இஸ்ரவேல் தேசத்துக்கு விரோதமாக கோகு வரும்காலத்தில் என் உக்கிரம் என் நாசியில் ஏறுமென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். [19] அந்நாளிலே இஸ்ரவேல் தேசத்திலே பெரிய அதிர்ச்சி உண்டாகி,*

*தேவன் தன்னுடைய மக்கள் மீது தமக்குள்ள பொறாமையின் காரணமாக அவர் இதை கொண்டுவரப்போகிறார்.*

*இரண்டாவதாக தேவன் மிகவும் கோபமாக இருப்பார், அதனால் இங்கே யாரோ ஒருவர் கோபத்துடன் இருக்கும் போது அவரது முகத்தை சிவப்பு நிறத்தில் காண்பிக்கும் தெளிவான படம் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது.*

*வ21-22, ரஷ்ய இராணுவம் முழுவதிலும் குழப்பம் மற்றும் ஒழுக்கமின்மை ஏற்பட்டு, ஒருவருக்கொருவர் கொலை செய்யத் தொடங்கபோகிறார்கள்.*

*தேவன் பல சேனைகளை இஸ்ரவேலின் மலைகளில் அழிக்க போகிறார்.*

*தேவன் இந்த படையை அழிக்கப்போகிறார். இந்தப் பெரிய இராணுவம் இயற்கைக்கு மாறான முறையில் அழிக்கப்படும் என்ற உண்மையை இந்த சிறிய பகுதி அடையாளப்படுத்துகிறது.*

*மேலே உள்ள அதிகாரத்தின் விரிவுரையிலிருந்து நாம் பார்க்கக்கூடியது என்னவென்றால் இது ஒரு சண்டை அல்லது ஒரு போர் கூட இல்லை. தேவன் அவர்களை நிலநடுக்கம், மழை, தீ, கந்தகம் ஆகியவற்றைக்கொண்டு அழித்துப்போடுவார்.*

*நடைபெற இருக்கும் நிகழ்வுகளை சுருக்கமாக பார்க்கலாம்:*

- *இஸ்ரவேலர்கள் அவர்களுடைய இடத்தில் திரும்பவும் கூடுவார்கள் (எசேக்கியேல் 37:12; ஏசாயா 11:11,12; உபாகமம் 30:3-5)*
- *பண்டைய நகரங்களை மீண்டும் கட்டி குடியேறுவார்கள் (எசேக்கியேல் 36:1-5, 8-10)*

- *அவர்கள் இஸ்லாமியர்/ "அரபியர்களின்" எதிர்ப்பை சந்திப்பார்கள் (எரேமியா 49:16; செப்பனியா 2:8; எசேக்கியேல் 25:12; 32:5; 36:2; ஒபதியா 1:10)*
- *இஸ்ரவேல் தன் பாதுகாப்புக்காக ஒரு இராணுவத்தை நிறுவுகிறது (எசேக்கியேல் 36:6,7; 38:8)*
- *அண்டை இஸ்லாமிய நாடுகளுக்கு இடையேயான உறவு (சங்கீதம் 83:1-8)*
- *இஸ்ரவேலை அழிக்க கூட்டமைப்பு உறுதிபடுத்தப்படுகின்றது (சங்கீதம் 83:1-5, 12).*
- *கூட்டமைப்பு மற்றும் இஸ்ரவேலுக்கு இடையே போர் தொடங்குகிறது (எரேமியா 49:2, 8, 19).*
- *தேசத்தின் உரிமைபத்திரம் கிடைக்கின்றது: "என் ஜனமாகிய இஸ்ரவேல்" (ஓசியா 1:8-10; ரோமர் 9:25-26; எசேக்கியேல் 36:8-12).*
- *கூட்டணியை இஸ்ரவேலர்கள் தேவனின் துணையோடு தோற்கடித்தனர். (ஒபதியா 1:9, 18; எசேக்கியேல் 25:13,14; எரேமியா 49:10,20,21, 23-26; ஏசாயா 11:12-14;17:1; 19:16,17).*
- *இஸ்ரேல் "மிகுந்த பெரும் படையானது" (எசேக்கியேல் 37:10; எரேமியா 49:21).*
- *இஸ்ரவேலர்கள் போர் கைதிகளை பிடித்துக்கொள்ளுகின்றனர் (எரேமியா 48:46,47; 49:3,6,11; செப்பனியா 2:10,11).*
- *அந்த பிராந்தியம் மாற்றியமைக்கப் படுகின்றது (ஏசாயா 17:1; எரேமியா 49:2, 10; செப்பனியா 2:4).*

- இஸ்ரவேல் அதன் எல்லைகளை விரிவுபடுத்த படுகின்றது (ஒபதியா 1:19; எரேமியா 49:2; ஏசாயா 19:18-19).
- தேசத்தில் இஸ்ரவேலர்கள் "பாதுகாப்புடன் வசிப்பார்கள் (எசேக்கியேல் 38:10-12).

**எசேக்கியேல் 39:9-10**, [9] "இஸ்ரவேல் பட்டணங்களின் குடிகள் வெளியே போய், கேடகங்களும், பரிசைகளும், வில்லுகளும், அம்புகளும் வளைதடிகளும், ஈட்டிகளுமாகிய ஆயுதங்களை எடுத்து எரிப்பார்கள்; ஏழுவருஷம் அவைகளை எடுத்து எரிப்பார்கள். [10] அவர்கள் வெளியிலிருந்து விறகுகொண்டுவராமலும் காடுகளில் வெட்டாமலும், ஆயுதங்களை எடுத்து எரிப்பார்கள்; அவர்கள் தங்களைக் கொள்ளையிட்டவர்களைக் கொள்ளையிட்டு, தங்களைச் சூறையாடினவர்களைச் சூறையாடுவார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

அவர்கள் இராஜ்யத்தில் தங்கள் ஆயுதங்களை எரிக்கப்போகிறார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா?

கீழே கொண்டு வந்த அனைத்து ஆயுதங்களும் ஏதோவொரு விதத்தில் ஏதோவொரு முறையில் எரிபொருளாக பயன்படுத்தப்படப் போகின்றன.

அவர்கள் மற்றுமொரு பெரிய பிரச்சனையை சந்திக்கப்போகிறார்கள். இறந்தவர்கள் அனைவரையும் தங்களுடைய தேசத்திலேயே அடக்கம் பன்னுவது. ஒரு முழு இராணுவமும் உங்கள் மலைகளில் அழிக்கப்பட்டு அந்த உடல்களை அகற்றுவதை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா?

**எசேக்கியேல் 39:11-16**, [11]"அந்நாளில் இஸ்ரவேல் தேசத்திலே சமுத்திரத்துக்குக் கிழக்கே பிரயாணக்காரரின் பள்ளத்தாக்கைப் புதைக்கிற ஸ்தானமாக கோகுக்குக் கொடுப்பேன்; அது வழிப்போக்கர் மூக்கைப் பொத்திக்கொண்டுபோகப்பண்ணும்; அங்கே கோகையும் அவனுடைய எல்லாச் சேனையையும் புதைத்து, அதை ஆமோன்கோகின் பள்ளத்தாக்கு என்பார்கள். [12]இஸ்ரவேல் வம்சத்தார், தேசத்தைச் சுத்தம்பண்ணும்படிக்கு அவர்களைப் புதைத்துத்தீர ஏழுமாதம் செல்லும். [13]தேசத்தின் ஜனங்களெல்லாரும் புதைத்துக்கொண்டிருப்பார்கள்; நான் மகிமைப்படும் அந்நாளிலே அது அவர்களுக்குக் கீர்த்தியாக இருக்கும் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். [14]தேசத்தைச் சுத்தம்பண்ணுவதற்காக அதில் கிடக்கும் மற்றப் பிரேதங்களைப் புதைக்கும்படிக்கு நித்தமும் தேசத்தில் சுற்றித்திரியும் மனுஷரையும், சுற்றித்திரிகிறவர்களோடேகூடப் புதைக்கிறவர்களையும் தெரிந்து நியமிப்பார்கள்; ஏழுமாதங்கள் முடிந்தபின்பும் இவர்கள் தேடிக்கொண்டிருப்பார்கள். [15]தேசத்தில் சுற்றித்திரிகிறவர்கள் திரிந்துகொண்டிருப்பார்கள்; யாராவது ஒருவன் மனுஷனின் எலும்பைக்காணும்போது புதைக்கிறவர்கள் அதை ஆமோன்கோகுடைய பள்ளத்தாக்கிலே புதைக்குமட்டும் அதினண்டையிலே ஒரு அடையாளத்தை நாட்டுவான். [16]அந்த நகரத்துக்கு ஆமோனா என்று பெயரிடப்படும்; இவ்விதமாய் தேசத்தைச் சுத்தம்பண்ணுவார்கள்.'"

அவர்கள் புதைப்பார்கள்,

- ஏழு மாதங்களுக்கு
- அவர்களை அடக்கம் செய்ய பெரிய அடக்குமிடம்
- முழு இடமும் நாற்றமெடுக்கும்
- அந்த நிலங்களை தூய்மை படுத்தும் தேவை
- அனைவரும் அடக்கம் பண்ணுவதில் ஈடுப்பட்டு இருப்பார்கள்,
- தேவனின் நாமம் மகிமைப்படும்,

*ரஷ்ய இராணுவத்தை அழித்தது தேவனாக இருந்தாலும், அந்திகிறிஸ்து இன்னமும் எருசலேமில் அதிகாரத்தில் உள்ளதால் அவனே அந்த வெற்றிக்கு உரிமை கோருவான்.*

***வெளி** 13:4, அந்த மிருகத்திற்கு அப்படிப்பட்ட அதிகாரங்கொடுத்த வலுசர்ப்பத்தை வணங்கினார்கள். அல்லாமலும்: **மிருகத்திற்கு ஒப்பானவன் யார்? அதினோடே யுத்தம்பண்ணத்தக்கவன் யார்?** என்று சொல்லி, மிருகத்தையும் வணங்கினார்கள்."*

*மக்கள் இன்னமும் அதை உணராமல் அந்த மிருகத்துக்கே புகழை கொடுப்பார்கள். சூழ்நிலைகளை தனக்கு சாதகமாக எடுத்து, சபையையும் மதத்தையும் அவன் அழித்திடுவான். கள்ள தீர்க்கதரிசிகள் அவனது ஒரு பெரிய சித்திரத்தை எருசலேம் நகரத்தில் வைத்து உலகம் முழுவதும் அவனை வணங்க வேண்டும் என்று அவர்கள் அவனோடு சேர்ந்து கூறுவார்கள்.*

*அவனும் ஆலயத்திலும் அருவருப்பானதை செய்வான்.*

***வெளி** 13:5, பெருமையானவைகளையும் தூஷணங்களையும் பேசும் வாய் அதற்குக் கொடுக்கப்பட்டது; அல்லாமலும்,*

*நாற்பத்திரண்டு மாதம் யுத்தம்பண்ண அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது.*

*மேற்கண்ட வசனத்திலிருந்து அவன் தம் வாயைத் திறந்து தேவனை தூசிப்பதை காணலாம். மூன்றரை ஆண்டுகள், 42 மாதங்கள், என்பது தெளிவாகுகிறது.*

*மிருகம் தேவனைத் தூஷித்து, இஸ்ரவேலைத் துன்பப்படுத்தத் தொடங்கும்.*

***வெளி** 13:7, மேலும், பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி அவர்களை ஜெயிக்கும்படிக்கு அதற்கு அதிகாரங்கொடுக்கப்பட்டதுமல்லாமல், ஒவ்வொரு கோத்திரத்தின்மேலும் பாஷைக்காரர்மேலும் ஜாதிகள்மேலும் அதற்கு அதிகாரங்கொடுக்கப்பட்டது.*

*இது இஸ்ரவேலாகிய தேசம்! சபையல்ல!!*

*இப்போது வெளிப்படுத்துதல் 6ஆம் அதிகாரத்தின் முத்திரைகள் திறக்கப்பட்டு தேவனின் கடுமையான தண்டனைகள் அவர்களின் மீது வரும். இதை குறித்து முந்தைய பாடங்களில் நாம் சுருக்கமாக பார்த்துள்ளோம். நான் உங்களுக்காக ஒரு சிறிய சுருக்கத்தை கொடுக்கிறேன்.*

- *படுகொலை உள்ளது, மக்கள் ஒருவரையொருவர் கொலை செய்வார்கள்*
- *பயங்கரமான பஞ்சம் வரும்*
- *மரணம் வரும்*
- *உலகத்திலுள்ள நான்கில் ஒரு பங்கு மக்கள் உயிரிழப்பனர்*

- நிலநடுக்கம்
- சூரியன் சாக்குப்பை போன்று கருப்பு நிறமாகி விடும்
- இரத்தம் போன்ற சந்திரன்
- நட்சத்திரங்கள் விழுந்துவிடும்
- மக்களின் மீது பாறைகள் மற்றும் மலைகள் விழுவதால் அவர்கள் கத்தத் தொடங்குவார்கள்.

எல்லாமே தவறாக சென்றதால் மக்கள் அந்திகிறிஸ்துவின் மீது குற்றம் சுமத்த துவங்கி உலகம் முழுவதும் அவன் மீது சோர்வடைய தொடங்குகினர். பிறகு தெற்கிலிருந்து ஒரு படை அவனுக்கு எதிராக வரும்.

பின்னர் தெற்கிலிருந்து பெரிய இராணுவம் நகரத் தொடங்கும். இதுவே இறுதி ஆகும். மூன்றரை ஆண்டுகள் இறுதியில் அவர்கள் அணிதிரண்டு இஸ்ரவேலை நோக்கி செல்வார்கள்.

தெற்கு இராஜ்யம் என்றால் அது எகிப்தைத் தவிர வேறொன்றுமில்லை. கிறிஸ்து பிறப்பதற்கு 3000 ஆண்டுகளுக்கு முன்னர் எகிப்து ஒரு வல்லமையான தேசமாக இருந்தது என்பதை நினைவில் கொள்ளுங்கள். பல நூற்றாண்டுகள் சென்ற பின்னர் அவர்கள் தங்கள் முக்கியத்துவத்தை இழந்து விட்டனர். ஆனால் இப்போது அவர்கள் மேலே எழும்பி வருகிறார்கள். ஆனால் இறுதி நாளுக்குள் அவர்கள் ஒரு பெரிய அதிகாரத்திற்கு வருவார்கள். இதை தேவன் தானியேலின் மூலம் தீர்க்கதரிசனமாக நமக்கு கூறியுள்ளார்.

***தானியேல் 11:40,*** *முடிவுகாலத்திலோவென்றால் தென்றிசை ராஜா அவனோடே முட்டுக்கு நிற்பான்; வடதிசை ராஜாவும் இரதங்களோடும் குதிரைவீரர்களோடும் அநேகம் கப்பல்களோடும் சூறைக்காற்றுபோல் அவனுக்கு விரோதமாய் வருவான்; அவன் தேசங்களுக்குள் பிரவேசித்து, அவைகளைப் பிரவாகித்துக் கடந்துபோவான்.*

*இந்த அதிகாரத்தில் மட்டுமே தெற்கு ராஜாவைப்பற்றிய பத்து மேற்கோள்கள் உள்ளன. முதல் ஏழு குறிப்புகள் வெளிப்படையாகவே இது எகிப்து என்பதை குறிக்கிறது. அதனால் இது எகிப்தைத் தவிர வேறொன்றுமில்லை என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.*

*அப்படியாக, தெற்கு இஸ்ரவேலுக்கு எதிராக வரும்போது வடக்கும் சுழற்காற்று போல வரும். அவர்கள் இரதங்களோடும், குதிரை வீரர்களோடும் பல கப்பல்களோடும் வருவார்கள். ரஷ்யா மற்றும் எகிப்திற்கு இடையில் வலுவான கூட்டணி இருப்பதை இது நமக்கு காட்டுகிறது. நான் இதைப் பற்றி ஊகிக்கவில்லை என்பதை தயவுசெய்து நினைவில் கொள்ளுங்கள், ஆனால் வேதவாக்கியம் என்ன சொல்கிறதென்று உங்களுக்குக் கூறுகிறேன்.*

***தானியேல் 11:36,*** *"ராஜா தனக்கு இஷ்டமானபடி செய்து, தன்னை உயர்த்தி, எந்த தேவனிலும் தன்னைப் பெரியவனாக்கி தேவாதி தேவனுக்கு விரோதமாக ஆச்சரியமான காரியங்களைப் பேசுவான்; கோபம் தீருமட்டும் அவனுக்குக் கைகூடிவரும்; நிர்ணயிக்கப்பட்டது நடந்தேறும்.*

*மேலே குறிப்பிடப்பட்டுள வசனம் அந்திகிறிஸ்துவைப் பற்றி கூறுகிறது. அவன் தன்னை தேவனுக்கு மேலே உயர்த்திக்கொள்வான்.*

*அதனால் எருசலேமுக்கு எதிராக வரும் ரஷ்யாவின் படைகள் அந்திகிறிஸ்துவை சந்திக்கும். ஏனெனில் அவன் தான் அப்போது எருசலேமில் ஆட்சி செலுத்துவான்.*

**தானியேல்** *11:37-39, [37]அவன் தன் பிதாக்களின் தேவர்களை மதியாமலும், ஸ்திரீகளின் சிநேகத்தையும், எந்த தேவனையும் மதியாமலும், எல்லாவற்றிற்கும் தன்னைப் பெரியவனாக்கி, [38]அரண்களின் தேவனைத் தன் ஸ்தானத்திலே கனம்பண்ணி தன் பிதாக்கள் அறியாத ஒரு தேவனைப் பொன்னினாலும் வெள்ளியினாலும், இரத்தினங்களினாலும், உச்சிதமான வஸ்துக்களினாலும் கனம்பண்ணுவான். [39]அவன் அரணிப்பான கோட்டைகளுக்காகவும், அந்நிய தேவனுக்காகவும் செய்வது என்னவென்றால், அவைகளை மதிக்கிறவர்களுக்கு மகா கனமுண்டாக்கி, அவர்கள் அநேகரை ஆளும்படிச் செய்து, அவர்களுக்கு தேசத்தைக் கிரயத்துக்காகப் பங்கிடுவான்.*

*இது தான் நடைபெறும்.*

*அந்திகிறிஸ்து தெற்கு எகிப்தை தாக்கும் போது, ரஷ்யா மற்றும் எகிப்து இருவரும் முன்னால் இணைக்கப்பட்ட கூட்டணியின் மூலம் அவன் உடனே தாக்கப்படுவான்.*

*இது அர்மகெதோனின் இறுதியான யுத்தத்தை துவக்கும்!*

இந்தத் தீர்க்கதரிசனம் சுமார் 3,000 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டது. அப்போது போரென்றால் போர் வீரர்கள், குதிரைகள் மற்றும் கப்பல்கள் என்று அர்த்தம்.

**தானியேல்** *11:41-43*, [41]அவன் சிங்காரமான தேசத்திலும் வருவான்; அப்பொழுது அநேக தேசங்கள் கவிழ்க்கப்படும்; ஆனாலும் ஏதோமும், மோவாபும், அம்மோன் புத்திரரில் பிரதானமானவர்களும், அவன் கைக்குத் தப்பிப்போவார்கள்.
[42]அவன் தேசங்களின்மேல் தன் கையை நீட்டுவான்; எகிப்துதேசம் தப்புவதில்லை. [43]எகிப்தினுடைய பொன்னும் வெள்ளியுமான ஐசுவரியங்களையும் உச்சிதமான எல்லா வஸ்துக்களையும் ஆண்டுகொள்ளுவான்; லீபியரும் எத்தியோப்பியரும் அவனுக்குப் பின்செல்லுவார்கள்.

அந்திகிறிஸ்துவானவன் இஸ்ரவேல் அனைத்தையும் ஆக்கிரமித்துக்கொள்வான். தேவன் அவர்களுக்கு வாக்களித்த பிரதேசத்தை அவன் கைபற்றினான்.

பரிசுத்த ஆவியானவர் அவர்களை ஏன் தப்பிக்க அனுமதித்தார் ஏதோம், மோவாப் மற்றும் அம்மோனியரை தப்பிக்க அனுமதித்தார் என்று நமக்கு தெரியாது. ஆனால் தேவன் அவர்களை தப்பியோட அனுமதித்தார்.

அந்திகிறிஸ்துவானவன் கீழே எகிப்திற்கு சென்று அங்கே அவனையும் அவனுடைய நேச நாடுகளையும் கைப்பற்றுகிறான். எகிப்தின் பொகிஷங்களாகிய தங்கம் மற்றும் வெள்ளி மற்றும் உள்ள அனைத்து விலைமதிப்பற்ற பொருள்களின் மீதும் அவனுக்கு அதிகாரம் உள்ளது. லிபியர்களும் (Libyans) எதோபியர்களும் (Ethiopians) அவனுடைய காலடியில் இருப்பார்கள்.

அவன் நிறைய பிரதேசங்களை கைப்பற்ற ஆரம்பித்து இவ்வுலகத்தில் அவனுடைய செல்வாக்கு அதிகரிக்கும். இயேசு வரும்போது அவன் அதிகாரத்தில் இருக்க வேண்டும். ஏனென்றால் அந்திகிறிஸ்துவுக்கு அதிக வல்லமையை கிடைத்துவிட்டால் கிறிஸ்துவால் பூமியை எடுத்துக்கொள்ள முடியாமலாகிவிடும் என்பதுதான் சாத்தானின் திட்டம்.

அதனால், இந்த அந்திகிறிஸ்து அண்டை நாடுகள் மற்றும் சுற்றியுள்ள நாடுகள் அனைத்தையும் கைப்பற்றிய பிறகு மற்றொரு சக்தி வர உள்ளது.

**தானியேல்** *11:44-45,* [44]ஆனாலும் கிழக்கிலும் வடக்கிலும் இருந்து வரும் செய்திகள் அவனைக் கலங்கப்பண்ணும்; அப்பொழுது அவன் அநேகரை அழிக்கவும் சங்காரம்பண்ணவும் மகா உக்கிரத்தோடே புறப்பட்டுப்போய், [45]சமுத்திரங்களுக்கு இடையிலுள்ள சிங்காரமான பரிசுத்த பர்வதத்தண்டையிலே தன் அரமனையாகிய கூடாரங்களைப் போடுவான்; ஆனாலும் அவனுக்கு ஒத்தாசை பண்ணுவாரில்லாமல், அவன் முடிவடைவான்.

அவன் அழிப்பதற்காக மிகுந்த கோபத்துடன் சென்று பலரை முற்றிலுமாக அழித்துப்போடுகிறான். கிழக்கிலும் வடக்கிலும் இருந்து ஒரு பெரிய இராணுவத்துடன் பலர் வருகிறார்கள்.

அந்திகிறிஸ்து இந்த பெரிய வல்லரசு கிழக்கிலிருந்து வருவதை பற்றியும் நான்காவது பெரும் பங்கேற்பாளர் இறுதி யுத்தத்தில் வருவார்கள் என்பதை பற்றியும் அறிந்துகொள்ளுவான்.

அவன் மத்தியதரை கடலுக்கும் (Mediterranean Sea) சாக்கடலுக்கும் (Dead Sea) இடையே இருந்தான். இதை மிகவும்

*அழகாக யோவான் தன்னுடைய வெளிப்படுத்துதல் புத்தகத்தில் விளக்கியுள்ளார்.*

***வெளி* 9:13-18,** *[13]ஆறாம் தூதன் எக்காளம் ஊதினான்;
அப்பொழுது அவனுக்கு முன்பாக இருந்த பொற்பீடத்தின்
நான்கு கொம்புகளிலுமிருந்து ஒரு சத்தந்தோன்றி,
[14]எக்காளத்தைப் பிடித்திருந்த ஆறாம் தூதனை நோக்கி:
ஐப்பிராத்தென்னும் பெரிய நதியண்டையிலே
கட்டப்பட்டிருக்கிற நான்கு தூதர்களையும் அவிழ்த்துவிடு
என்று சொல்லக்கேட்டேன். [15]அப்பொழுது மனுஷரில்
மூன்றிலொருபங்கைக் கொல்லும்படிக்கு
ஒருமணிநேரத்திற்கும், ஒரு நாளுக்கும், ஒரு மாதத்திற்கும், ஒரு
வருஷத்திற்கும் ஆயத்தமாக்கப்பட்டிருந்த அந்த நான்கு
தூதர்களும் அவிழ்த்துவிடப்பட்டார்கள்.
[16]குதிரைச்சேனைகளாகிய இராணுவங்களின் தொகை இருபது
கோடியாயிருந்தது; அவைகளின் தொகையைச்
சொல்லக்கேட்டேன். [17]குதிரைகளையும் அவைகளினால்
ஏறியிருந்தவர்களையும் நான் தரிசனத்தில் கண்டவிதமாவது;
அவர்கள் அக்கினிநிறமும் நீலநிறமும் கந்தகநிறமுமான
மார்க்கவசங்களையுடையவர்களாயிருந்தார்கள்;
குதிரைகளுடைய தலைகள் சிங்கங்களின்
தலைகளைப்போலிருந்தன; அவைகளுடைய
வாய்களிலிருந்து அக்கினியும் புகையும் கந்தகமும்
புறப்பட்டன. [18]அவைகளுடைய வாய்களிலிருந்து புறப்பட்ட
அக்கினி புகை கந்தகம் என்னும் இம்மூன்றினாலும் மனுஷரில்
மூன்றிலொருபங்கு கொல்லப்பட்டார்கள்.*

*மூன்றில் ஒரு பங்கு மக்களை கொல்ல பெரிய படை ஒன்று வருகிறது.*

*அந்த படையின் அளவு 200 மில்லியன் படைவீர்கள் என்பதை வ16, சொல்கிறது.*

*உலகில் எந்த இராணுவம் 200 மில்லியன் வீரர்களைக் கொண்டது என்று உங்களுக்குத் தெரியுமா?*

*அது சீனாவைத் தவிர வேறொன்றும் இல்லை.*

*தேவதூதர்கள் ஐப்பிராத்து (Euphrates) நதிகளில் கட்டப்பட்ட நான்கு தேவதூதர்களின் கட்டுகளை தளர்த்தனர்.*

*ஐப்பிராத்து (Euphrates) நதி எங்குள்ளது என்று உங்களுக்கு தெரியுமா?*

*இஸ்ரவேலுக்கு எந்த திசையில் உள்ளது?*

***கிழக்கு**!!*

*ஈராக் !*

*வ 18, குண்டுகள் மற்றும் துப்பாக்கிகள் மற்றும் அணு ஆயுதங்கள் கூட. மூன்றில் ஒரு பங்கு மக்கள் அழியப்போகிறார்கள். கிழக்கில் உள்ள இந்த பெரிய இராணுவம் நகரும்போது அதன் வழியில் வருவோரை படுகொலை செய்து மிகப்பெருமளவில் படுகொலை செய்யப்படும்.*

*அதனால் இப்போது அர்மகெதோனில் நடைபெற இருக்கும் உண்மையான போருக்கு செல்வோம்.*

***வெளி 14:15**, அப்பொழுது வேறொரு தூதன் தேவாலயத்திலிருந்து புறப்பட்டு, மேகத்தின்மேல் உட்கார்ந்திருக்கிறவரை நோக்கி: பூமியின் பயிர் முதிர்ந்தது, அறுக்கிறதற்குக் காலம் வந்தது, ஆகையால் உம்முடைய*

அரிவாளை நீட்டி அறுத்துவிடும் என்று மிகுந்த சத்தமிட்டுச்சொன்னான்.

இந்த நிலையில் பூமியின் மீது தேவன் நியாயத்தீர்ப்பு வழங்கும் நேரம் கூடி வந்தது.

**வெளி** *16:12-16,* [12]ஆறாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஐப்பிராத்து என்னும் பெரிய நதியின்மேல் ஊற்றினான்: அப்பொழுது சூரியன் உதிக்குந் திசையிலிருந்தும் ராஜாக்களுக்கு வழி ஆயத்தமாகும்படி அந்த நதியின் தண்ணீர் வற்றிப்போயிற்று. [13]அப்பொழுது, வலுசர்ப்பத்தின் வாயிலும் மிருகத்தின் வாயிலும் கள்ளத்தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டுவரக்கண்டேன். [14]அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள்; அவைகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களைச் சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்குக் கூட்டிச்சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப்போகிறது. [15]இதோ, திருடனைப்போல் வருகிறேன். தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு, தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான். [16]அப்பொழுது எபிரெயு பாஷையிலே அர்மகெதோன் என்னப்பட்ட இடத்திலே அவர்களைக் கூட்டிச் சேர்த்தான்.

ஐப்பிராத்து (Euphrates) நதி வறண்டு போகப் போகிறது!

இங்கே அந்திகிறிஸ்துவை மூன்று பட்டங்கள் கொண்டு விவரிக்கப்பட்டுள்ளது. பொய்யான திரித்துவம் (False Trinity).

- வலுசர்ப்பம்
- மிருகம்
- கள்ள தீர்க்கதரிசிகள்




இந்த முழு படைக்கும் ஐப்பிராத்து (Euphrates) நதிக்கு வந்து அதை கடப்பதில் கஷ்டம் ஏதும் இல்லை. ஒரு மிகப்பெரிய அணையை ரஷியர்கள் 1972இல் கட்டினார்கள்! ஐப்பிராத்து (Euphrates) நதி வற்றிப்போகும் என தேவன் கூறுகிறார். இப்போது அது மனிதக் கரங்களால் சேதமடையப்போகிறதா அல்லது இயற்கைக்கு மாறாக வற்றப்போகிறதா என்பது நமக்கு தெரியாது.

கிழிக்கின் ராஜா இந்த எல்லா சக்தியோடு செல்கிறார். அதன்பின் அந்த பிசாசுகள் அனைவரையும் அர்மகெதோனுக்கு

அழைத்து வர துவங்கும். முழு உலகமும் அந்த இடத்தில் ஒருங்க *(converge)* ஆரம்பிக்கும்.

தங்களால் இஸ்ரவேலை அழித்துவிட முடியும் என்ற எண்ணத்தில் அவர்கள் வருகிறார்கள்.

அவர்கள் இஸ்ரவேலுக்கு எதிராக இல்லை எல்லாம் வல்ல தேவனையே எதிர்க்கிறார்கள் என்பதை அவர்கள் அறியவில்லை.

சாத்தான் அவர்கள் அனைவரையும் இந்த இடத்திற்கு அழைத்து வருகிறான். அவனுடைய இறுதியான முயற்சி. ஆனால் இவை அனைத்தும் வீழ்ச்சி அடைய ஆரம்பமாகிறது. அவர்கள் அவர்களுக்குள் ஒருவரோடு ஒருவர் சண்டையிட ஆரம்பிக்கின்றனர். இதனால் ஒரு கொடூரமான போர் முறிந்தது.

அதுவே மகேதோ *(Magedo)* பள்ளத்தாக்கு, அர்மகெதோன்.

"உலகிலுள்ள அனைத்து படையினரும் அங்கே கூட முடியும்" என்று நேபோலியன் *(Napoleon)* கூறினார். சாலமன் தன்னுடைய தொழுவத்தை வைக்கும் ஒரு இடம் உண்டு மேலும் அந்த இடத்தின் முனையில் நின்றுகொண்டு உங்கள் கண்களால் அந்த பள்ளத்தாக்கை எத்தனை தூரம் வரை காண முடியுமோ உங்களால் பார்க்க முடியும்.

அந்த போர்க்களம் வடக்கு பகுதியில் உள்ளது. தெற்கில் மிகவும் தூரமான கீழ் பகுதியான ஏதோமில் சண்டை நடக்கப்போகிறது என்று தீர்க்கதரிசன புத்தகமாகிய யோவேல் புத்தகத்தில் வேதாகமம் கூறுகிறது.

*இது எருசலேம் நகரத்தையும் யோசபாத் (Jehoshaphat) பள்ளத்தாக்கையும் மூடுகிறது.*

*இது மகேதோ (Magedo) முதல் ஏதோம் வரையான முழு நீளத்தையும் உள்ளடக்கப்போகிறது. அது எவ்வளவு நீளம் என்று உங்களுக்கு தெரியுமா?*

*அந்த நிலத்தின் நீளம் மிகவும் துல்லியமாக 200 மைல்கள்.*

***வெளி 19:11-16**, 11 பின்பு, பரலோகம் திறந்திருக்கக்கண்டேன்;*
*இதோ, ஒரு வெள்ளைக்குதிரை காணப்பட்டது, அதின்மேல்*
*ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமுமுள்ளவரென்னப்*
*பட்டவர்; அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறார்.*
*12 அவருடைய கண்கள் அக்கினி ஜுவாலையைப்*
*போலிருந்தன, அவருடைய சிரசின்மேல் அநேக கிரீடங்கள்*
*இருந்தன; அவருக்கேயன்றி வேறொருவருக்குந் தெரியாத ஒரு*
*நாமமும் எழுதியிருந்தது. 13 இரத்தத்தில் தோய்க்கப்பட்ட*
*வஸ்திரத்தைத் தரித்திருந்தார்; அவருடைய நாமம்*
*தேவனுடைய வார்த்தை என்பதே. 14 பரலோகத்திலுள்ள*
*சேனைகள் வெண்மையும் சுத்தமுமான மெல்லிய*
*வஸ்திரந்தரித்தவர்களாய், வெள்ளைக் குதிரைகளின்மேல் ஏறி,*
*அவருக்குப் பின்சென்றார்கள். 15 புறஜாதிகளை வெட்டும்*
*படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம்*
*புறப்படுகிறது; இருப்புக்கோலால் அவர்களை அரசாளுவார்;*
*அவர் சர்வவல்லமையுள்ள தேவனுடைய உக்கிரகோபமாகிய*
*மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார். 16 ராஜாதி ராஜா, கர்த்தாதி*
*கர்த்தா என்னும் நாமம் அவருடைய வஸ்திரத்தின்மேலும்*
*அவருடைய தொடையின்மேலும் எழுதப்பட்டிருந்தது.*

*அவர்கள் இயேசுவை எதிகொள்வார்கள்!*

1. *தேவனின் வார்த்தை*
2. *உண்மையும் உத்தமும்*
3. *ராஜாதி ராஜனும் & தேவாதி தேவனும்*

*அநேக மோசமான தேவபக்த்தி இல்லாத மக்களை யாராலேயும் ஒன்று சேர்க்க முடியாது என்று நமக்குத் தெரியும். அப்படிப்பட்ட திட்டத்தை சாத்தான் போட்டிருந்தாலும் அது நடந்திருக்காது. அவர்கள் ஒருவரோடு ஒருவர் சண்டையிடுவதன் மூலம் மட்டுமே உங்களால் அவர்களை ஒன்று சேர்க்க முடியும்.*

*அவர்கள் ஒருவரோடொருவர் சண்டையிடுகின்றனர். அவர்கள் கிறிஸ்துவை பார்த்து அவரோடு சண்டையிட திரும்புவார்கள். ஒரு தேவதூதன் வெயிலில் நின்று அங்கு இறக்கப்போவர்களின் மாமிசங்களை இராபோஜனமாக உண்பதற்காக பறவைகளை அழைப்பான்.*

**வெளி** *14:14-20,* [14]*பின்பு நான் பார்த்தபோது, இதோ, வெண்மையான மேகத்தையும், அந்த மேகத்தின்மேல் மனுஷகுமாரனுக்கொப்பானவராய்த் தமது சிரசின்மேல் பொற்கிரீடத்தையும் தமது கையிலே கருக்குள்ள அரிவாளையுமுடைய ஒருவர் உட்கார்ந்திருக்கிறதையும் கண்டேன்.* [15]*அப்பொழுது வேறொரு தூதன் தேவாலயத்திலிருந்து புறப்பட்டு, மேகத்தின்மேல் உட்கார்ந்திருக்கிறவரை நோக்கி: பூமியின் பயிர் முதிர்ந்தது, அறுக்கிறதற்குக் காலம் வந்தது, ஆகையால் உம்முடைய அரிவாளை நீட்டி அறுத்துவிடும் என்று மிகுந்த*

சத்தமிட்டுச்சொன்னான். [16]அப்பொழுது மேகத்தின்மேல்
உட்கார்ந்தவர் தமது அரிவாளைப் பூமியின்மேல் நீட்டினார்,
பூமியின் விளைவு அறுப்புண்டது. [17]பின்பு வேறொரு தூதனும்
கருக்குள்ள அரிவாளைப் பிடித்துக்கொண்டு
பரலோகத்திலுள்ள தேவாலயத்திலிருந்து புறப்பட்டுவந்தான்.
[18]அக்கினியின்மேல் அதிகாரமுள்ள வேறொரு தூதனும்
பலிபீடத்திலிருந்து புறப்பட்டுவந்து, கருக்குள்ள
அரிவாளைப்பிடித்திருக்கிறவனை நோக்கி: பூமியின்
திராட்சப்பழங்கள் பழுத்திருக்கிறது, கருக்குள்ள உமது
அரிவாளை நீட்டி, அதின் குலைகளை அறுத்துவிடும் என்று
மிகுந்த சத்தத்தோடே சொன்னான். [19]அப்பொழுது அந்தத்
தூதன் தன் அரிவாளைப் பூமியின் மேலே நீட்டி, பூமியின்
திராட்சப்பழங்களை அறுத்து, தேவனுடைய
கோபாக்கினையென்னும் பெரிய ஆலையிலே போட்டான்.
[20]நகரத்திற்குப் புறம்பேயுள்ள அந்த ஆலையிலே அது
மிதிக்கப்பட்டது; அந்த ஆலையிலிருந்து ஆயிரத்தறுநூறு
ஸ்தாதி தூரத்திற்கு இரத்தம் புறப்பட்டுக் குதிரைகளின்
கடிவாளங்கள்மட்டும் பெருகிவந்தது.

அவர்கள் தேவனுடைய கோபமாகிய திராட்சை ஆலைக்குள் மிதிபடுவதற்காகவே விழுவார்கள்.

ஐந்து அடி ஆழமான இரத்தத்தை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா?

அது எவ்வளவு நீளம் என்று உங்களுக்கு தெரியுமா?

மிகவும் துல்லியமாக 200 மைல்கள். அர்மகெதோனின் நீளம்.

*கொடூரமான போர் மற்றும் கொடூரமான படுகொலை மற்றும் நாடுகளுக்கு இடையே சண்டை நடக்க இறுக்கிறது. புறஜாதிகளுக்கும் மற்றும் முழு உலகுக்குமான இறுதிப் போரின் படம் நம்மிடையே இருக்கிறது. அவர்கள் சண்டையிடுவதற்காக ஒன்று கூடி தேவனையே அழிக்க முடியும் என்று எண்ணுகின்றனர். அவர்கள் தங்களுக்குள்ளே சண்டையிட்டுக் கொண்டிருகிறார்கள் என்பதை சீக்கிரமாக கண்டடைவார்கள். அது கொடூரமான விஷயம்.*

*அவர்கள் ஒரு அடியிலேயே அழிந்து விடுவார்கள். தேவனாகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தையினால் இத்தனை நூற்றாண்டுகளாக சாத்தான் போட்டிருந்த எல்லா முயற்சிகளும் முழுமையான பூஜ்ஜியத்திற்கு வந்தடையும்.*

*மிகவும் சுவாரஸ்யமான விஷயம் என்னவென்று உங்களுக்கு தெரியுமா??*

*நாம் இயேசு கிறிஸ்துவுடன் வருவோம்!! ஆம்!!!*

***யூதா 1:14-15**, [14]ஆதாமுக்கு ஏழாந்தலைமுறையான ஏனோக்கும் இவர்களைக்குறித்து: இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்துவந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும், [15]தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான்.*

***சகரியா 14:5***, *அப்பொழுது என் மலைகளின் பள்ளத்தாக்கு வழியாய் ஓடிப்போவீர்கள்; மலைகளின் பள்ளத்தாக்கு ஆத்சால்மட்டும் போகும்; நீங்கள் யூதாவின் ராஜாவாகிய உசியாவின் நாட்களில் பூமியதிர்ச்சிக்குத் தப்பி ஓடிப்போனதுபோல் ஓடிப்போவீர்கள்; என் தேவனாகிய கர்த்தர் வருவார்; தேவரீர் எல்லாப் பரிசுத்தவான்களும் வருவார்கள்.*

***2 தெசலோனிக்கேயர் 2:8-12***, *[8]நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார். [9]அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும், [10]கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும் இரட்சிக்கப்படத்தக்கதாக சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும். [11]ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, [12]அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்.*

***சகரியா 14:1-6***, *[1]இதோ, கர்த்தருடைய நாள் வருகிறது, உன்னில் கொள்ளையானது உன் நடுவிலே பங்கிடப்படும். [2]எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணச் சகல ஜாதிகளையும் கூட்டுவேன்; நகரம் பிடிக்கப்படும்; வீடுகள் கொள்ளையாகும்; ஸ்திரீகள் அவமானப்படுவார்கள்; நகரத்தாரில் பாதி மனுஷர் சிறைப்பட்டுப்போவார்கள்;*

*மீதியான ஜனமோ நகரத்தை விட்டு அறுப்புண்டுபோவதில்லை. [3]கர்த்தர் புறப்பட்டு, யுத்தநாளிலே போராடுவதுபோல் அந்த ஜாதிகளோடே போராடுவார். [4]அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒலிவமலையின்மேல் நிற்கும்; அப்பொழுது மகா பெரிய பள்ளத்தாக்கு உண்டாகும்படி ஒலிவமலை தன் நடுமையத்திலே கிழக்கு மேற்காய் எதிராகப் பிளந்துபோம்; அதினாலே, ஒரு பாதி வடபக்கத்திலும் ஒரு பாதி தென்பக்கத்திலும் சாயும். [5]அப்பொழுது என் மலைகளின் பள்ளத்தாக்கு வழியாய் ஓடிப்போவீர்கள்; மலைகளின் பள்ளத்தாக்கு ஆத்சால்மட்டும் போகும்; நீங்கள் யூதாவின் ராஜாவாகிய உசியாவின் நாட்களில் பூமியதிர்ச்சிக்குத் தப்பி ஓடிப்போனதுபோல் ஓடிப்போவீர்கள்; என் தேவனாகிய கர்த்தர் வருவார்; தேவரீர் எல்லாப் பரிசுத்தவான்களும் வருவார்கள். [6]அந்நாளில் வெளிச்சம் இல்லாமல், ஒருவேளை பிரகாசமும் ஒருவேளை மப்புமாயிருக்கும்.*

*தேவபக்தி அற்ற தேசங்களை நியாயத்தீர்ப்பின் பள்ளத்தாக்கிலே (Valley of Decision) கூட்டிச்சேர்க்கிறார். அங்கே அவர்கள் அனைவரும் அவர்களுடைய பாவத்தின் படி நியாயம் தீர்க்கப்படுகிறார்கள். இதுவே புறஜாதியார் மீதான இறுதியான நியாயத்தீர்ப்பு மேலும் புறஜாதியாரின் உபத்திர காலத்தின் இறுதி பகுதி.*

***சகரியா 14:12**, <u>எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணின எல்லா ஜனங்களையும் கர்த்தர் வாதிக்கும் வாதையாவது: அவர்கள் காலூன்றி நிற்கையிலும் அவர்களுடைய சதை அழிந்துபோகும்</u>; அவர்கள் கண்கள் தங்கள் குழிகளிலே*

*கெட்டுப்போகும்; அவர்கள் நாவு அவர்கள் வாயிலே அழுகிப்போகும்.*

*இது அணு ஆயுதத்தை பற்றியதா?? ஊகம் ஏதுமில்லை!*

*இதுவும் பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகளால் முன்னறிவிக்கப்பட்டது.*

*நான் எல்லா தீர்க்கதரிசனங்களையும் வரிசையாக பட்டியலிட்டுள்ளேன்.*

*இது உங்களை அச்சமுருத்துவதற்காககோ அல்லது பயமுறுத்துவதற்காககோ இல்லை முடிவை அறிந்துகொள்வதற்காகவே. நீங்கள் இதனை அறிய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.*

*தேவன் தன்னுடைய தீர்க்கதரிசிகளை கொண்டு தீர்க்கதரிசனம் உரைக்கச் செய்தார். அதனால், உங்களை இதைப்பற்றி தெரிந்துகொள்ள வைப்பது என்னுடைய கடமை.*

***ஏசாயா** 13:6-11,* 6 *அலறுங்கள், கர்த்தரின் நாள்*
*சமீபமாயிருக்கிறது, அது சர்வவல்லவரிடத்திலிருந்து மகா*
*சங்காரமாய் வரும்.* 7 *ஆதலால் எல்லாக் கைகளும் நெகிழ்ந்து,*
*எல்லா மனுஷரின் இருதயமும் கரைந்துபோம்.* 8 *அவர்கள்*
*திகிலடைவார்கள்; வேதனைகளும் வாதைகளும் அவர்களைப்*
*பிடிக்கும்; பிள்ளைபெறுகிறவளைப்போல வேதனைப்*
*படுவார்கள்; ஒருவரையொருவர் பிரமித்துப்பார்ப்பார்கள்;*
*அவர்கள் முகங்கள் நெருப்பான முகங்களாயிருக்கும்.* 9 *இதோ,*
*தேசத்தைப் பாழாக்கி, அதின் பாவிகளை அதிலிருந்து*
*அழிப்பதற்காகக் கர்த்தருடைய நாள் கடூரமும், மூர்க்கமும்,*
*உக்கிரகோபமுமாய் வருகிறது.* 10 *வானத்தின் நட்சத்திரங்களும்*

*ராசிகளும் ஒளி கொடாதிருக்கும்; சூரியன் உதிக்கையில் இருண்டுபோம்; சந்திரன் ஒளி கொடாதிருக்கும்.*
*[11]பாவத்தினிமித்தம் உலகத்தையும், அக்கிரமத்தினிமித்தம் துன்மார்க்கரையும் நான் தண்டித்து, அகங்காரரின் பெருமையை ஒழியப்பண்ணி, கொடியரின் இடும்பைத் தாழ்த்துவேன்.*

***ஏசாயா 34:1-9**, [1]ஜாதிகளே, கேட்கிறதற்குக் கிட்டிவாருங்கள்; ஜனங்களே கவனியுங்கள்; பூமியும் அதின் நிறைவும், பூச்சக்கரமும் அதில் உற்பத்தியான யாவும் கேட்கக்கடவது.*
*[2]சகல ஜாதிகளின்மேலும் கர்த்தருடைய கடுங்கோபமும், அவர்களுடைய சகல சேனைகளின்மேலும் அவருடைய உக்கிரமும் மூளுகிறது; அவர்களைச் சங்காரத்துக்கு நியமித்து, கொலைக்கு ஒப்புக்கொடுக்கிறார். [3]அவர்களிலே*
*கொலைசெய்யப்பட்டவர்கள் வெளியே எறியுண்டு கிடப்பார்கள்; அவர்களுடைய பிரேதங்கள் நாற்றமெடுக்கும்; அவர்களுடைய இரத்தத்தினாலே மலைகளும் கரைந்துபோம்.*
*[4]வானத்தின் சர்வசேனையும் கரைந்து, வானங்கள் புஸ்தகச்சுருளைப்போல் சுருட்டப்பட்டு, அவைகளின் சர்வசேனையும் திராட்சச்செடியின் இலைகள் உதிருகிறது போலவும், அத்திமரத்தின் காய்கள் உதிருகிறதுபோலவும் உதிர்ந்து விழும். [5]வானங்களில் என் பட்டயம்*
*வெறிகொண்டது; இதோ ஏதோமின்மேலும், நான் சங்காரத்துக்கு நியமித்த ஜனத்தின் மேலும், அது நியாயஞ்செய்ய இறங்கும். [6]போஸ்றாவிலே கர்த்தருக்கு ஒரு*
*யாகமும், ஏதோம் தேசத்திலே மகாசங்காரமும் உண்டு; கர்த்தருடைய பட்டயம் இரத்தத்தில் திருப்தியாகி, நிணத்தினால் பூரிக்கின்றது; ஆட்டுக்குட்டிகள் கடாக்களுடைய*

*இரத்தத்தினாலும், ஆட்டுக்கடாக்களுடைய குண்டிக் காய்களின் கொழுப்பினாலும் திருப்தியாகும்.*
*7 அவைகளோடே காண்டாமிருகங்களும், ரிஷபங்களோடே காளைகளும் வந்து மடியும், அவர்கள் தேசம் இரத்தவெறிகொண்டு அவர்கள் மண் நிணத்தினால் கொழுத்துப்போம்.*
*8 அது கர்த்தர் பழிவாங்கும் நாள், சீயோனுடைய வழக்கினிமித்தம் பதிலளிக்கும் வருஷம்.*
*9 அதின் ஆறுகள் பிசினாகவும், அதின் மண் கந்தகமாகவும் மாறி, அதின் நிலம் எரிகிற கீலாய்ப்போம்.*

***ஏசாயா** 63:1-6,*
*1 ஏதோமிலும் அதிலுள்ள போஸ்றா பட்டணத்திலுமிருந்து, சாயந்தீர்ந்த வஸ்திரங்களுடைய வராகவும், மகத்துவமாய் உடுத்திருக்கிறவராகவும், தமது மகத்தான வல்லமையிலே எழுந்தருளினவராகவும் வருகிற இவர் யார்? நீதியாய்ப் பேசி இரட்சிக்க வல்லவராகிய நான்தானே.*
*2 உம்முடைய உடுப்புச் சிவப்பாகவும், உம்முடைய வஸ்திரங்கள் ஆலையை மிதிக்கிறவன் வஸ்திரங்கள்போலவும் இருக்கிறதென்ன?*
*3 நான் ஒருவனாய் ஆலையை மிதித்தேன்; ஜனங்களில் ஒருவனும் என்னோடிருந்ததில்லை, நான் என் கோபத்திலே அவர்களை மிதித்து, என் உக்கிரத்திலே அவர்களை நசுக்கிப்போட்டேன்; அதினால் அவர்கள் இரத்தம் என் வஸ்திரங்களின்மேல் தெறித்தது, என் உடுப்பையெல்லாம் கறைப்படுத்திக் கொண்டேன்.*
*4 நீதியைச் சரிக்கட்டும் நாள் என் மனதிலிருந்தது; என்னுடையவர்களை மீட்கும் வருஷம் வந்தது.*
*5 நான் பார்த்தேன், துணைசெய்வார் ஒருவருமில்லை; தாங்குவார் ஒருவருமில்லை என்று ஆச்சரியப்பட்டேன்; அப்பொழுது என் புயமே எனக்கு இரட்சிப்பாகி, என் உக்கிரமே என்னைத்*

*தாங்கிற்று. [6]நான் என் கோபத்திலே ஜனங்களை மிதித்து, என் உக்கிரத்திலே அவர்களை வெறியாக்கி, அவர்கள் சாரத்தைத் தரையிலே இறங்கப்பண்ணினேன்.*

**எரேமியா** *44:10-12, [10]அவர்கள் இந்நாள்மட்டும் மனம் நொறுங்குண்டதுமில்லை, அவர்கள் பயப்படுகிறதுமில்லை; நான் உங்கள் முன்பாகவும் உங்கள் பிதாக்கள் முன்பாகவும் வைத்த என் வேதத்தின்படியும் என் கட்டளைகளின்படியும் நடக்கிறதுமில்லை. [11]ஆகையால், இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், இதோ, நான் உங்களுக்குத் தீங்குண்டாகவும், யூதாவனைத்தையும் சங்கரிக்கத்தக்கதாகவும், என் முகத்தை உங்களுக்கு விரோதமாகத் திருப்பி, [12]எகிப்து தேசத்திலே தங்கும்படிக்கு வரத் தங்கள் முகங்களைத் திருப்பின மீதியான யூதரை வாரிக்கொள்ளுவேன்; அவர்கள் அனைவரும் எகிப்து தேசத்திலே நிர்மூலமாவார்கள்; அவர்கள் சிறியவன்முதல் பெரியவன்வரைக்கும், பட்டயத்துக்கு இரையாகி, பஞ்சத்தாலும் நிர்மூலமாவார்கள்; அவர்கள் பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் செத்து, சாபமும் பாழும் பழிப்பும் நிந்தையுமாவார்கள்.*

**செப்பானியா** *3:8, "ஆகையால் நான் கொள்ளையாட எழும்பும் நாள்மட்டும் எனக்குக் காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; என் சினமாகிய உக்கிரகோபத்தையெல்லாம் அவர்கள்மேல் சொரியும்படி ஜாதிகளைச் சேர்க்கவும், ராஜ்யங்களைக் கூட்டவும் நான் தீர்மானம்பண்ணினேன்; பூமியெல்லாம் என் எரிச்சலின் அக்கினியினால் அழியும்.*

**வெற்றி:**

*சாத்தானின் மீதான இறுதி வெற்றியைப் பற்றிய மகத்தான செய்தி.*

***வெளி 19:19-21,*** *[19]பின்பு, மிருகமும் பூமியின் ராஜாக்களும்
அவர்களுடைய சேனைகளும், குதிரையின்மேல்
ஏறியிருக்கிறவரோடும் அவருடைய சேனையோடும்
யுத்தம்பண்ணும்படிக்குக் கூடிவரக்கண்டேன். [20]அப்பொழுது
மிருகம் பிடிக்கப்பட்டது; மிருகத்தின் முன்பாகச் செய்த அற்புதங்களால் அதின் முத்திரையைத் தரித்தவர்களையும் அதின் சொரூபத்தையும் வணங்கினவர்களையும் மோசம் போக்கின கள்ளத்தீர்க்கதரிசியுங்கூடப் பிடிக்கப்பட்டான்; இருவரும் கந்தகம் எரிகிற அக்கினிக்கடலிலே உயிரோடே
தள்ளப்பட்டார்கள். [21]மற்றவர்கள் குதிரையின்மேல்
ஏறினவருடைய வாயிலிருந்து புறப்படுகிற பட்டயத்தால் கொல்லப்பட்டார்கள்; அவர்களுடைய மாம்சத்தினால் பறவைகள் யாவும் திருப்தியடைந்தன.*

*இது நம்மை ஆயிரம் ஆண்டுகால (millennial) ராஜ்யத்திற்குள் எடுத்துச் செல்லும்!*

***வெளி 20:1-4,*** *[1]ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும்
பெரிய சங்கிலியையும் தன் கையிலே பிடித்துக்கொண்டு
வானத்திலிருந்திறங்கிவரக்கண்டேன். [2]பிசாசென்றும்
சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும்வரைக்கும் அது ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல்*

*முத்திரைபோட்டான். [3]அதற்குப் பின்பு அது கொஞ்சக்காலம் விடுதலையாகவேண்டும்.*

## *பரிசுத்தவான்கள் இயேசுவோடு சேர்ந்து 1,000 ஆண்டுகள் அரசாளுவார்கள்*

*[4]அன்றியும், நான் சிங்காசனங்களைக் கண்டேன்; அவைகளின்மேல் உட்கார்ந்தார்கள்; நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இயேசுவைப்பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனுடைய ஆத்துமாக்களையும், மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன். அவர்கள் உயிர்த்து கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள்.*

*எனவே, ஒரு ஆயிரம் ஆண்டுகளுக்கு சாத்தான் கட்டுண்டு இருப்பான்.*

*நாம் நம்முடைய அடுத்த பாடத்தில் ஆயிரம் ஆண்டுகால (millennial) ராஜ்யத்தை பற்றி பார்ப்போம்.*